111

111

இளைஞர் கதா மஞ்சரி மலர் 2.

காற்றோடு வாதாடிய கந்தன்.

BY

L. SRINIVASA AYYAR,
Senior Tamil Pandit, Government College,
COIMBATORE.

PUBLISHED BY

KAMAKSHI BOOK DEPOT

32, Audiappa Naick Street, Sowcarpet, Madras.

1933 [*Price* **3** *As,*

CH
031,3
N33
172800

இளைஞர் கதா மஞ்சரி (மலர் 2.)

காற்றோடு வாதாடிய கந்தன்

BY

L. SRINIVASA AYYAR,

Senior Tamil Pandit, Government College

COIMBATORE

PUBLISHED BY

KAMAKSHI BOOK DEPOT

32, Audiappa Naick Street, Sowcarpet, Madras.

ரிஜிஸ்தர் செய்தது] 1933 [விலை அணா-3.

முன்னுரை

ஆரம்ப பாடசாலைகளில் பயிலும் இளைஞர்கள் தாமே படித்துத் தேர்வதற்கு அநுகூலமாக 'இளைஞர் கதா மஞ்சரி' என்னும் தொடரில் சிறு கதைப்புத்தகங்கள் சில யாங்கள் வெளியிட்டுள்ளோம். அவற்றுள் இது ஒன்றாகும்.

இக்கதைப் புத்தகங்கள் யாவும் சிறு குழந்தைகளுக்கு ஏற்றவாறு பெரிய எழுத்தில், தக்க சித்திரங்களுடன், அழகாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

நம் தமிழகத்திலுள்ள ஆசிரியர்களும், மற்றைப் பெரியோர்களும் இதனையும், இதன் வரிசையில் வரும் ஏனைய புத்தகங்களையும் இளைஞர்களுக்கு உபபாடங்களாக வைத்து ஆதரிக்கக் கேட்டுக் கொள்கின்றோம்;

சென்னை,
15-1-33.

இங்ஙனம்,
காமாக்ஷி புஸ்தக சாலையார்.

உ

காற்றோடு வாதாடிய கந்தன்

I

சோழ நாட்டில் மருதூர் என்று ஒரு கிராமம் உண்டு. அந்த ஊரில் முன் வயது சென்ற ஒர் ஏழைக் கிழவி இருந்தாள். அவளுக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் கந்தன். கந்தன் சிறு பையன். ஆனாலும் அவன் தைரியம் உள்ளவன். அவன் தன் தாய் சொல்லைத் தட்ட மாட்டான். அவள் சொல்லிய வேலைகளைச் செய்வான்; பிறரோடு வீண் சண்டைக்குப் போக யாட்டான். ஆனால், யாராவது வலுவில் சண்டைக்கு வந்தால் அவன் அவர்களுக்குப் பயப்பட மாட்டான்.

ஒருநாள் அவன் தாயார் அவனை அயலே உள்ள கடைக்குப் போய் ஒரு படி அரிசி வாங்கி வரும்படிச் சொன்னாள். கந்தனும் ஒரு சிறு கூடையை எடுத்துக் கொண்டு, கடைக்குச் சென்றான்; கடையில் அரிசி வாங்கினான். பின் அச் சிறுவன் அந்த அரிசிக் கூடையைத் தன் தலை மீது வைத்துக் கொண்டு தன் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தான். வரும் வழியின் நடுவே ஒரு பெரும் மணல் திடல் உண்டு. அந்தத் திடலின் வழியே கந்தன் நடந்து வந்தான். வரும்போது அவன் பாடிக் கொண்டும், அயலில் உள்ள பொருள்களைப் பார்த்துக் கொண்டும் நடந்து கொண்டிருந்தான். அப்போது வழியில் ஒரு பெருங் காற்று வீசி அடித்தது.

காற்றுக் கடுமையாக வீசி அடிக்கவே, கந்தன் தலைமேல் இருந்த அரிசிக் கூடை கவிழ்ந்து கீழே விழுந்தது. அரிசி எல்லாம் நாலா பக்கமும் சிதறிப் போயிற்று. கந்தன் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான். அதற்குள் காற்று அந்தக் கூடையை வெகு தூரம் அடித்துக் கொண்டு போய் விட்டது. அரிசி எல்லாம் மணலில் வீழ்ந்து வீணுயின.

அப்போது கந்தனுக்கு உண்டான கோபத்திற்கு அளவே இல்லை. அவன், "இந்தக் காற்றுக்கு என்ன இவ்வளவு குறும்பு? என் அரிசியை எல்லாம் வாரி இறைத்துவிட்டு, என் கூடையையும் கொண்டு போய் விட்டதே! வீட்டுக்குப் போனால் என் தாயார் அரிசி எங்கே என்று கேட்பாளே! அவளிடம் நான் என்ன சொல்லுவேன்! வீட்டில் இன்று சாப்பாட்டுக்கும் வேறு வழி இல்லையே!" என்று ஏங்கி அழுதான்.

கந்தனுக்கோ வீடு நோக்கிச் செல்ல இஷ்டமில்லை. அவன் அந்தத் துஷ்டக் காற்றைக் கண்டு பிடித்து அதனிடம் இருந்து தன் அரிசியையும் கூடையையும் வாங்க வேண்டும் என்று தீர்மானித்தான். ஆதலால், அச் சிறுவன் திரும்பி,

அக் காற்று வரும் திசையை நோக்கி நடந்து சென்ருன்.

அவ்வாறு கந்தன் சிறிது தூரம் செல்லவே, அப்போது அவன் எதிரே ஒரு கிழவன் ஒரு தடி ஊன்றிக் கொண்டு தள்ளாடி வரக் கண்டான். கந்தன், அக் கிழவனிடம் சென்று, "ஐயா! இப்பொழுது வீசிக் கொண்டிருக்கும் இந்தக் காற்றின் பெயர் என்ன? இதற்கு இருப்பிடம் யாது?" என்று கேட்டான். வந்த மனிதன் கந்தனை நோக்கி, "அப்பா! இதற்குத் தென்றல் காற்று என்று பெயர். இங்கிருந்து முப்பது காத தூரத்திற்கு அப்பால் மலய பருவதம் என்று ஒரு மலை இருக்கிறது. அந்த மலைதான் இந்தத் தென்றல் காற்றுக்கு இருப்பிடம்;" என்றனன்.

அதைக் கேட்ட கந்தன் அந்தக் கிழவனுக்கு வந்தனம் செலுத்தி விட்டு அவ் வழியே நடந்து சென்றான். அவன் தன் எதிரே வந்தோரை எல்லாம் மலய மலைக்குப் போகும் வழி எது என்று விசாரித்துக் கொண்டே போனான். அச் சிறுவன் வழியில் இருந்த ஊர்களில் தங்கி அவ்விடங்களில் கிடைத்த உணவை அருந்திச் சென்றான். அவன் இரவு ஆனால் ஓர் ஊரில் தங்கிக் காலையில் எழுந்து வழி நடந்தான். இப்படி அவன் விடாமல் நடந்து செல்லவே பதினைந்தாம் நாள் அவன் எதிரில் அந்த மலய பருவதமும் தென்பட்டது.

அந்த மலையைக் கண்டதும் கந்தனுக்குத் தைரியம் அதிகரித்தது. அவன், இனி அந்த

அயோக்யனை தென்றலைக் கண்டு பிடித்து விடலாம் என்று எண்ணி ஞன். ஆதலால், அவன் விரைந்து நடந்து அந்த மலையின் அடி வாரத்தை அடைந்தனன்.

II

காற்றுக் கெல்லாம் ஒரு கடவுள் உண்டு. அவர் பெயர் வாயு தேவர். அந்த வாயு தேவர் கந்த னுடைய மனத் துணிவையும், விடா முயற்சியையும் கண்டார். அவர் அவன் மீது இரக்கம் கொண் டனர். மேலும், அவர் அச் சிறுவனுக்கு அருள் புரிய விரும்பி ஞர். ஆதலால், அந்த வாயு தேவர் அங்கு அவன் எதிரே தோன்றினர். அத் தேவர் பருத்து உயரமாக இருந்தார். அவர் தலையில் ஓர் அழகான

கிரீடம் இருந்தது. அவர் கையில் கதை என்னும் ஒரு பெரிய குண்டாந்தடி வைத்துக் கொண்டு இருந்தார்.

கந்தன் அவரைக் கண்டதும் பிரமித்து நின்றான்; ஆச்சரியம் அடைந்தான். ஆனால் அவன் சிறிதும் பயப்பட வில்லை. ஏன் கந்தன் தைரியசாலி அல்லவா ?

அந்த வாயு தேவர் கந்தனைப் பார்த்து, “அப்பா ! நீ யார் ? நீ இங்குத் தனியாக எங்கே செல்கின்றாய் ? என்று கேட்டார். கந்தன், “ஐயா ! என் பெயர் கந்தன். நான் இருப்பது மருதூர். இங்குத் தென்றல் என்று ஒரு துஷ்டன் இருக்கிறான் என நான் கேள்விப்பட்டேன். அவன் எங்கே இருக்கிறான்? அவனை உங்களுக்குத் தெரியுமா ?” என்று கேட்டான்.

வாயு பகவான் கந்தனுடைய அறியாத் தனத்தையும் மனத் துணிவையும் கண்டு, "நீ தேடி வந்த தென்றல் என்பவன் என் குமாரர்களில் ஒருவனே. அவன் நல்லவன் ஆயிற்றே! அவன் மீது நீ கோபங் கொள்ளக் காரணம் என்ன? அவன் உனக்கு என்ன தீங்கு செய்தான்?" என்று கேட்டார்.

அதைக் கேட்டதும் கந்தனுக்குக் கோபம் அதிகரித்தது. அவன் அந்த வாயு தேவரைப் பார்த்து, "தென்றல் என்பவன் உங்கள் பையன் தானே? நீங்கள் அவனை நல்லவன் என்று சொல்கிறீர்களே! அவன் செய்த அநியாயத்தைக் கேளும். ஒரு நாள் என் தாயார் சொன்னபடி நான் கடைக்குப் போய் ஒருபடி அரிசி வாங்கிக் கொண்டு வீட்டிற்குத் திரும்பிப் போனேன். போகும்

[வாயுதேவர் கந்தனுக்கு ஒரு கிண்ணம் அளித்தல்.]

போது உங்கள் மகனுன அந்தத் தென்றல் என்பவன், என் பின்னுல் வந்து என் தலை மீது இருந்த அரிசிக் கூடையைத் தட்டி விட்டான். அரிசி எல்லாம் கீழே சிதறி விழுந்து மணலோடு கலந்து போயின. அதோடு அந்தத் துஷ்டன் என் கூடையையும் எடுத்துக் கொண்டு வேகமாய் ஓடி விட்டான். இது தருமமா?" என்று கூறினுன்.

அதைக் கேட்ட அந்த வாயு தேவர், "அப்பா! நீ வருத்தப் பட வேண்டாம். ஒருபடி அரிசி தானே போயிற்று? அது உங்களுக்கு ஒரு நாளைக்குத் தான் உணவு ஆகும். இதோ பார்! இந்தக் கிண்ணத்தை நான் உனக்குத் தருகின்றேன். இந்தக் கிண்ணம் தெய்வத் தன்மை உள்ளது. உனக்கு உணவு வேண்டும்போது நீ இந்தக்

கிண்ணத்தை எடுத்து ஓர் இடத்தில் கவிழ். உடனே அங்கு நல்ல சுவையுள்ள உணவு நீ வேண்டும் அளவு வந்திருக்கும்;" இனி நீ என்றும் உணவுக்குக் கஷ்டப்பட வேண்டியதில்லை;" என்று கூறிக் கந்தனிடம் அக் கிண்ணத்தைக் கொடுத்து அப்புறம் சென்றனர். கந்தனும் மகிழ்ச்சியுடன் அந்தக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டு தன் ஊரை நோக்கித் திரும்பினான்.

III

கந்தன் திரும்பித் தன் ஊருக்கு நடந்து செல்லுகையில், வழியில் பொழுது போகும் நேரம் ஆயிற்று. ஆதலால், அவன் அருகே இருந்த ஓர் ஊரை அடைந்து அங்குள்ள ஒரு சத்திரத்தில் போய்த் தங்கினான். அந்தச் சத்தி

ரத்தில் பணம் கொடுப்பவர் களுக்கு உணவு அளிப்பது வழக்கம். ஆத லால் அங்குப் பல வழிப் போக்கர் கள் வந்து தங்கி இருந்தனர். சற்று நேரத்திற் கெல்லாம் ஒரு மணி ஓசை கேட்டது. உடனே அங்கு இருந்தோர் எல்லாரும் உணவு அரு ந்த எழுந்தனர். அப்போது கந்த னுக்கு அருகே இருந்த ஒருவன் அவனை உணவு அருந்த அழைத் தான்.

கந்தன் அவனைப் பார்த்து, "நான் இந்தச் சத்திரத்துச் சோற்றை நம்பி இங்கு வரவில்லை. உங்கள் எல்லோருக்கும் என்னால் நல்ல உணவு இனிமையாய் அளிக்க முடியும்;" என்றனன். அதைக் கேட்ட அங்கு இருந்தவர் எல்லோ ரும் கந்தனை ஒரு பைத்தியக்காரன் என்று பரிகாசம் செய்தனர். உடனே கந்தன் தன் கிண்ணத்தை

[கந்தன் சத்திரத்தில் இருந்தோருக்கு உணவு அளித்தல்.]

எடுத்து அங்கு ஒரு புறத்தில் கவிழ்த்தனன். என்ன அதிசயம்! கவிழ்த்தது தான் தாமதம்! அவ் விடத்தில் நல்ல மணமும், சுவையும் பொருந்திய ஆகாரம் பல வகை யுடன் வந்து நிறைந்து விட்டது! அதன் வாசனை அந்தச் சத்திரம் எங்கும் பரவியது. அதனுல் எல் லோரும் அங்கு வந்து கூடி விட்டனர்.

கந்தன் அங்கு வந்து கூடிய ஜனங்கள் எல்லோருக்கும் அந்த உணவை எடுத்து எடுத்துக் கொடுத்தான். தானும் உண்டான். அவ்வளவு சுவையும், மணமும் உள்ள உணவை அவர்கள் அது வரையில் கண்டதே இல்லை. ஆத லால் அவர்கள் வயிறு நிரம்ப உண்டனர். பின்பு அவர்கள் கந்த னைப் புகழ்ந்து வாழ்த்திச் சென்ற னர். பிறகு கந்தன் அந்தக் கிண்

ணத்தை எடுத்துக் கழுவி தன் துணியில் மூடி வைத்துக் கொண்டு அங்கு ஓர் இடத்தில் படுத்துக் கொண்டான். அவன் வழி நடந்து வந்த களைப்பால் உடனே அயர்ந்து தூங்கி விட்டான்.

அந்த அதிசயத்தை எல்லாம் அந்தச் சத்திரத்துத் தலைவன் பார்த்துக் கொண்டே இருந்தான். அவன் ஒரு பேராசைக் காரன். ஆதலால் அவன், கந்தனிடம் உள்ள அந்த அதிசமான கிண்ணத்தை அபகரித்துக் கொள்ள எண்ணினான். அவனுக்கு அன்று இரவு தூக்கமே வர வில்லை. அவன் மனத்தில் அந்தக் கிண்ணத்தைப் பற்றிய எண்ணமே குடி கொண்டு இருந்தது. அவன், “இந்தக் கிண்ணம் என்னிடம் இருந்தால், நான் ஒரு செலவு இல்லாமல், வரும் பிரயாணிகளுக்கு உணவு அளிக்கலாம்.

உணவும் நன்றாக இருக்கும். ஆதலால், எல்லோரும் இங்கேயே உண்ண வருவார்கள். அதனால் எனக்குப் பணம் நிறையக் கிடைக்கும். கூடிய சீக்கிரத்தில் நான் பெரும் பணக்காரன் ஆவேன் ;" என்று எண்ணிக் கொண்டே இருந்தான்.

எல்லோரும் தூங்கி விட்டனர். நடு இரவும் ஆயிற்று. அப்போது அந்தச் சத்திரத்துத் தலைவன் மெதுவாக எழுந்து வெளியே வந்தான் ; ஓசைப் படாமல் கந்தன் படுத்து இருந்த இடத்தை அடைந்தான் ; கந்தன் அயர்ந்து தூங்குவதைக் கண்டான். அவன் சந்தடி செய்யாமல் கந்தன் துணியில் மூடி வைத்திருந்த அக் கிண்ணத்தை எடுத்துக் கொண்டு அங்கு அது போலத் தன்னிடம் இருந்த வேறு

ஒரு கிண்ணத்தை வைத்து விட்டுப் போய் விட்டான்.

கந்தன் காலையில் தூக்கம் தெளிந்து எழுந்தான். அங்கு இருந்த கிண்ணத்துடன் அவன் தன் வீடு நோக்கி வழி நடந்து சென்றான். நடுப் பகல் ஆயிற்று. வெயிலும் அதிகரித்தது. அச் சிறுவனுக்குப் பசி உண்டா யிற்று. ஆதலால் அவன் ஓரிடத் தில் தங்கி உணவு அருந்திக் களைப்பாறிப் பின் வழி நடந்து செல்லலாம் என்று எண்ணினான். அங்குச் சாலை ஓரத்தில் ஒரு குளம் இருந்தது. கந்தன் அந்தக் குளத் தில் இறங்கிக் குளித்து உடம்பைச் சுத்தம் செய்து கொண்டான்; பின் அதன் அருகே இருந்த ஒரு ஆல மரத்தின் நிழலை அடைந்தான்; அந்த மரத்தில் இருந்து சில இலை களைப் பறித்து அவற்றைக் கீழே

பாரப்பினுன்; பிறகு தனக்கு உணவு வேண்டும் என்று அந்தக் கிண்ணத்தை அந்த இலையின் மேல் கவிழ்த்தான். ஆகாரம் வரவில்லை! அவன் ஏமாற்றம் அடைந்தான். மறுபடியும் கவிழ்த்துப் பார்த்தான். உணவு இல்லை. கந்தன் வாயு தேவர் தன்னை ஏமாற்றி விட்டார் என்று எண்ணினுன். அந்தக் கிண்ணம் மாற்றப் பட்டது அவனுக்குத் தெரியாது அல்லவா?

கந்தனுக்கு அழுகை வந்து விட்டது. என்ன செய்வது என்று அவனுக்குத் தோன்ற வில்லை; வீட்டுக்கு வெறுங் கையோடு போகவும் இஷ்ட மில்லை. அதனுல் அவன் திரும்பி அந்த மலய மலையை நோக்கி நடந்தான். மறுநாள் காலையில் அவன் அந்த மலையின் அடிவாரம் அடைந்தான்.

———

IV

அப்போது கந்தன் எதிரே முன்போல அந்த வாயு தேவர் தோன்றினார். அவர், "கந்தா! நீ ஏன் மறுபடியும் இங்கு வந்தாய்?" என்று கேட்டனர். கந்தன் "ஐயா! நீங்கள் கொடுத்த கிண்ணம் இன்று எனக்கு உணவு அளிக்க வில்லை. இவ்வாறு என்னை நீங்கள் ஏமாற்றலாமா?" என்று கூறினான். அந்த வாயு பகவானுக்கு அக் கிண்ணம் களவு போனது தெரியும். ஆதலால், அவர் கந்தனுக்கு மறுபடியும் உதவி செய்ய எண்ணினார். வாயுதேவர் கந்தனிடம் ஒரு வெள்ளிச் சிமிழைக் கொடுத்து, "சிறுவனே! இதோ பார்! இது ஓர் அதிசயமான வெள்ளிச் சிமிழ். உனக்குப் பணம் வேண்டும் போது இந்தச் சிமிழை எடுத்து ஒருதரம் குலுக்கு.

குலுக்கினால் இதற்குள் நீ வேண்டிய அளவு பொன் நாணயங்கள் வந்து விடும். பிறகு நீ இந்தச் சிமிழைத் திறந்து இதில் உள்ள பொன் நாணயங்களை எடுத்துக் கொள்ளலாம். இதை ஜாக்கிரதையாக எடுத்துச் செல்;" என்று கூறி அவனை வழி அனுப்பினார்.

கந்தனுக்கு அப்போது மிகவும் சந்தோஷம் உண்டாகி விட்டது. அவன் அந்த வெள்ளிச் சிமிழைப் பத்திரமாய் ஒரு பையில் போட்டுக் கொண்டு திரும்பி வேகமாய் வழி நடந்தான். பொழுது போனதும் கந்தன் முன் தங்கிய அதே சத்திரத்திற்கே வந்து சேர்ந்தான். அன்று இரவு அவன் அங்கு உணவு அருந்தினான். அந்தச் சத்திரத்து அதிகாரியும் கந்தனிடம் வந்து, அவன் உண்ட உணவுக்காக நான்கு

அணுப் பணம் கேட்டான். கந்தனே, "இவ்வளவு தானே! இதோ தருகிறேன்;" என்று, அந்த வெள்ளிச் சிமிழை எடுத்து ஒரு குலுக்குக் குலுக்கினான். அதனுள் ஒரு பொன் காசு இருந்தது. அதை அவன் எடுத்து அலக்ஷிய மாக, அந்தச் சத்திரத்துத் தலைவனிடம் கொடுத்து, "இதை நீ எடுத்துக் கொள்;" என்று கூறினான். பிறகு அவன் அப்புறம் சென்று முன் போல அங்கு ஓர் இடத்தில் படுத் துக் கொண்டான்.

அதைக் கண்ட அந்தச் சத்தி ரத்துத் தலைவனுக்குப் பெரும் ஆச்சரியம் உண்டாயிற்று. ஒரு வேளை சாப்பிட்ட அந்தச் சிறு உணவுக்காக ஒரு பொன் நாணயம் கொடுத்தது அதிகம் அல்லவா? ஆதலால், அந்தச் சத்திரத்துத் தலைவன் கந்தனிடம் இருந்த

அந்தச் சிமிழில் ஏதோ அதிசயம் இருக்கிறது என்று எண்ணிஞன். ஆகவே அவன் கந்தனிடம் இருந்த அந்தச் சிமிழையும் திருடிக் கொள்ள எண்ணிஞன்.

அந்தப் பேராசை பிடித்த வஞ்சகன், எல்லோரும் தூங்கிய பிறகு, முன் போல நடு நிசியில் எழுந்து கந்தன் தூங்கும் இடம் வந்தான். வந்து அவன், கந்தன் பையில் இருந்த அந்த வெள்ளிச் சிமிழை எடுத்துக் கொண்டான். பிறகு அவன் மெதுவாகத் தன்னிடம் இருந்த அதே மாதிரியான வேறு ஒரு சிமிழைக் கந்தன் பையில் வைத்து விட்டுப் போய் விட்டான்.

மறுநாள் பொழுது விடிந்தது. கந்தன் எழுந்து அந்தச் சிமிழை எடுத்துக் கொண்டு வழி நடந்தான். நடுப் பகல் ஆகவே அவனுக்குப் பசி அதிகரித்தது. அதஞல்

அவன் அயலில் இருந்த ஒரு கடையில் ஏதாவது தின்பண்டம் வாங்கித் தின்னலாம் என்று எண்ணித் தன் வெள்ளிச் சிமிழை எடுத்துக் குலுக்கினான். ஓசை கேட்கவில்லை. சிமிழைத் திறந்து பார்த்தான். அதனுள் பொன் காசும் இல்லை; ஒன்றும் இல்லை. வெறும் சிமிழாகவே இருந்தது. மறுபடியும் அவன் பலமுறை குலுக்கிக் குலுக்கிப் பார்த்தான். ஒன்றுமே இல்லை.

அப்போது கந்தனுக்கு உண்டான வருத்தத்தை என்ன என்று சொல்வது! அந்த வாயுதேவர் மறுபடியும் தன்னை ஏமாற்றி விட்டார் என்றே எண்ணினான். ஆதலால், அவன் மீண்டும் வந்த வழி திரும்பி நடந்து சென்று அந்த மலய மலையின் அடிவாரத்தை அடைந்தான்.

நடந்த விஷயங்கள் எல்லாம் அந்த வாயு தேவருக்குத் தெரியும்.

அவர் அந்த ஏழைச் சிறுவன் மீது முன்னிலும் பல மடங்கு அன்பு கொண்டார். அவனுக்கு மறுபடியும் உதவி செய்ய எண்ணினார்; ஆதலால், அவர் முன்போலக்கந்தன் முன் தோன்றினார். அந்தத் தேவர் கந்தனை நோக்கி, "அப்பா கந்தா! நீ மறுபடியும் ஏன் இங்கு வந்தாய்? நீ வீட்டை விட்டு வந்து பலநாள்கள் ஆகின்றன. உன் தாயார் உன்னைக் காணமல் வருந்துவாளே?" என்றனர்.

கந்தன், "ஐயா! என்னை வீணாய்ப் பரிகாசம் செய்ய வேண்டாம். நிச்சயமாய் என்னை நீங்கள் ஏமாற்றுகிறீர். உங்கள் மகன் என் அரிசியையும் கொட்டி விட்டான்; கூடையையும் பிடுங்கிக் கொண்டான். நீங்களும் என்னை வீணாய் அலையச் செய்து ஏமாற்றுகிறீர்.

இது ஞாயமா?" என்று கூறி அழு தான்.

— —

V

வாயுதேவருக்கு அச் சிறுவனிடம் முன்னிலும் அதிக இரக்கம் உண்டாகி விட்டது. ஆதலால் அவர் கந்தனைத் தம் அருகே அழைத்து, "அப்பா கந்தா! நீ அறியாச் சிறுவன்! நான் உன்னை ஏமாற்ற வில்லை. அந்தச் சத்திரத்துத் தலைவன் ஒரு பேராசைக்காரன். அவனே உனக்கு நான் கொடுத்த கிண்ணத்தையும், வெள்ளிச் சிமிழையும் அபகரித்துக் கொண்டான். ஆதலால், இப்பொழுது உனக்கு ஒன்று தருகிறேன். இதோ பார்! இந்தப் பையில் ஒரு குறுந்தடி இருக்கிறது. உனக்கு யாராவது தீங்கு செய்தால், நீ, 'ஏ! குறுந்தடியே! நீ வெளியே வா!'

என்று சொன்னுல் போதும். உடனே அது வெளியே வந்து உன் பகைவனை வளைத்துக் கொண்டு ஓயாமல் ஓங்கி ஓங்கி அடிக்கும். மறுபடியும் நீ, 'குறுந் தடியே! போதும்; நீ உள்ளே போ!' என்று சொன்னுல் உடனே அது அடிப்பதை நிறுத்தி விட்டு இந்தப் பைக்குள் புகுந்து கொள்ளும். ஆதலால், இனி உன்னை யாரும் ஏமாற்ற முடியாது;" என்று சொல்லி அந்தப் பையைக் கந்த னிடம் கொடுத்து அனுப்பினுர்.

கந்தன் அந்தக் குறுந்தடி யைப் பெற்றுக் கொண்டு, வழி நடந்தான். பொழுது போனதும், முன் போல அவன் அந்தச் சத்திரத் திற்கே வந்து சேர்ந்தான். சத்திரத் துத் தலைவன் கந்தனைக் கண்டதும், அவனிடம் புதியதாக ஒரு பையும் அதற்குள் ஒரு குறுந்தடியும்

இருக்கக் கண்டான். அதுவும் ஓர் அரிய பொருளாக இருக்கலாம் என்று எண்ணினான். அவன் ஆசைக்கோ அளவில்லை. ஆதலால், அவன் கந்தனிடம் இருந்து அந்தக் குறுந்தடியையும் அபகரித்துக்கொள்ளக் கருதினான். அதனால், அந்த வஞ்சகன் கந்தனைப் பிரியமாக அழைத்துப் பல இனிய வார்த்தைகள் பேசினான்; அவனுக்கு நல்ல உணவும் அளித்தான். அந்த உணவுக்காக அவன் அன்று கந்தனிடம் இருந்து பணம் கூட வாங்கிக் கொள்ள வில்லை.

கந்தனோ, உணவு அருந்திய பின் தான் படுக்கப் போவதாகச் சொல்லி வெளியே வரப் புறப்பட்டான். அதுகண்ட அந்தச் சத்திரத்துத் தலைவன், "அப்பா! நீ சிறு பையனாக இருக்கிறாய். இப்பொழுது இந்த ஊர்ப் புறங்களில்

திருட்டுப் பயம் அதிகரித்து இருக்கிறது. நீ தனியே வெளியில் படுத்துக் கொள்வது நல்லது அல்ல. ஆதலால், நீ இன்று மேலே மாடியில் இருக்கும் அறையில் படுத்துக் கொள்; அங்குப் பயமின்றித் தூங்கலாம்;" என்று கூறினான். கந்தனும் அதற்குச் சம்மதித்தான். சத்திரத்துத் தலைவனும் கந்தனை அந்த அறைக்கு அழைத்துச் சென்று அங்கே அவனைப் படுக்கச் செய்தான்.

கந்தனுக்கு அவனுடைய கெட்ட எண்ணமெல்லாம் நன்ருய்த் தெரிந்தது. ஆனலும் அவன் சிறிதும் பயப்படவே இல்லை. என்? அவனிடம் குறுந்தடி இருந்தது அல்லவா? அதனல் அச் சிறுவன் அங்குப் போய்ப் படுத்துக் கொண்டான். அன்று கந்தன் தூங்க வில்லை; ஆனல்

தூங்குவது போலப் பாசாங்கு செய்து படுத்துக் கொண்டு இருந்தான்.

எல்லோரும் படுத்துத் தூங்கி விட்டனர். இரவு பதினைந்து நாழிகை ஆயிற்று. அப்போது கந்தன் படுத்திருந்த அறையின் கதவு மெதுவாகத் திறக்கப்பட்டது. அங்கு ஒருவன் சப்தம் செய்யாமல் நடந்து கந்தன் படுக்கை அருகே வந்தான். அவன் யார்? அந்தச் சத்திரத்துத் தலைவனே!

கதவு திறந்த சப்தம் கேட்டதும் கந்தன் அயர்ந்து தூங்குவது போலப் பெருங் குறட்டை விட்டுக் கொண்டு இருந்தான். அந்தச் சத்திரத்துத் தலைவன் கையில் கந்தனுடைய குறுந்தடி போல ஒரு தடி வைத்திருந்தான். அவன்

43
10-13

மெதுவாகக் கந்தனிடம் வந்து அவன் பக்கத்தில் இருந்த குறுந் தடியை எடுக்கத் தொடங்கினான். அதைக் கண்ட கந்தன், எழுந்து உட்கார்ந்து, "ஏ குறுந்தடியே! நீ வெளியே வா! உனக்கு ஒரு நல்ல விருந்து அகப்பட்டு இருக்கிறது! வாசீக்கிரம்!" என்று கூறினான்.

கந்தன் சொன்னது தான் தாமதம்! உடனே அந்தக் குறுந் தடி அந்தப் பையில் இருந்து வெளியே வந்தது. அது அந்தச் சத்திரத்துத் தலைவனை வழி விடாமல் வளைத்துக் கொண்டு, துரத்தித் துரத்தி அடித்தது. அவன் அடி பொறுக்க மாட்டாமல் வாய் விட்டுக் கதறினான்; மூலைக்கு மூலை ஓடினான். ஆனால் அந்தக் குறுந் தடி அவனை விடவே இல்லை. ஓயாமல் மண்டையிலும், தோளி லும், காலிலும், முதுகிலும் மாறி



[கந்தன் குறுந்தடி சத்திரத்துத் தலைவனை அடித்தல்.]

மாறி அடித்தது. என்ன செய்வான்! வேறு வழி இல்லாமல் கந்தன் காலில் வந்து விழுந்து, "அப்பா! என்னை அடிக்க வேண்டாம்! இந்தக் குறுந்தடியை உன் பைக்குள் போகச் சொல்;" என்று சொல்லி அழுதான்.

கந்தன், "ஆனல் நீ முன் என்னிடம் இருந்து திருடின கிண்ணத்தையும், வெள்ளிச் சிமிழையும் கொண்டு வா!" என்றான், சத்திரத்துத் தலைவன், "இதோ கொண்டு வருகிறேன். தயவு செய்து உன் குறுந்தடியை அடக்கு;" என்று கூறினன். கந்தனும், "குறுந்தடியே! பைக்குள் போ;" என்றான். உடனே அது பைக்குள் புகுந்து கொண்டது. அந்தச் சத்திரத்துத் தலைவன், "தப்பிப் பிழைத்தது தம்பிரான் புண்ணியம்;" என்று

எண்ணி, ஓடிப்போய் முன் தான் திருடிக்கொண்ட கிண்ணத்தையும், வெள்ளிச் சிமிழையும் கொண்டு வந்து கந்தனிடம் கொடுத்து, "என்னை மன்னிக்க வேண்டும்;" என்று கூறிச் சென்றான்.

பொழுது விடிந்ததும் கந்தன் கிண்ணம், வெள்ளிச் சிமிழ், குறுந் தடி ஆகிய மூன்றையும் எடுத்துக் கொண்டு தன் ஊரை நோக்கிச் சென்றான். அந்தச் சத்திரத்துத் தலைவனோ, அன்று இரவு உண்ட குறுந்தடி விருந்தினால் பலநாள் வரையில் எழுந்திருக்கவே இல்லை.

VI

கந்தனுக்கு இப்பொழுது உணவுக்கோ, பணத்திற்கோ குறை வில்லை. ஏனென்றால், கிண்ணம் அவன் வேண்டும் போதெல்லாம்

நல்ல உணவை அளித்தது. வெள்ளிச் சிமிழோ செலவுக்கு நிறையப் பொன் சொரிந்தது. மேலும் கையிலோ குறுந்தடி இருந்தது. அதனால் அவனுக்குப் பயமும் இல்லை. ஆதலால், கந்தன் ஒரு நல்ல குதிரையும் வண்டியும் வாங்கிக் கொண்டான். பிறகு அவன் நல்ல ஆடை ஆபரணங்களும் வாங்கி அணிந்து கொண்டு, அந்தக் குதிரை வண்டியில் ஏறித் தன் ஊரை அடைந்தான்.

மருதூரில் உள்ள ஜனங்கள் ஓர் அழகிய குதிரை வண்டி வருவதைக் கண்டு, வருவது யார் என்று அறிய விரும்பினர். எல்லோரும் தெருவில் வந்து நின்றனர். ஒருவருக்கும் கந்தனை இன்னான் என்று அடையாளம் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஏன்? அவன் முன் இருந்த ஏழைக் கந்தன் அல்லன்!



[கந்தன் வீடு வந்து தன் தாயாரைக் காணுதல்.]

இப்பொழுது அவன் ஒரு சீமா ஞக இருந்தான்.

வண்டியும் கந்தன் தாய் இருந்த குடிசை யண்டை வந்து நின்றது. வண்டியைக் கண்ட அவ னுடைய அன்னை உள்ளே இருந்து வெளியே வந்தாள். கந்தன் தன் தாயாரைக் கண்டதும், விரைந்து வண்டியை விட்டு இறங்கி, அவ ளிடம் சென்று, அம்மா! என்று வணங்கினுன். அப்பொழுது தான் அவன் தன் மகன் கந்தன் என்பதை அந்தக் கிழவி அறிந்தாள். பல நாள் தன் மகனைக் காணுமல் வருந் திக் கொண்டிருந்த அவள் தன் இரு கைகளாலும் அவனைத் தழுவி முத்த மிட்டாள். பின்பு கந்தனை அவள் வீட்டின் உள்ளே அழைத் துச் சென்றுள்.

கந்தன் தான் அரிசி வாங்கச் சென்றதையும், அந்த அரிசி

காற்றினால் கொட்டிப் போனதை யும், பிறகு தான் பெற்ற அரிய பொருள்களைப் பற்றியும் தன் தாயாரிடம் கூறினான். அக் கிழவி யும் தன் மகனுக்கு உண்டான அதிர்ஷ்டத்தை எண்ணி எண்ணி மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள்

அன்று முதல் கந்தனுடைய வறுமை நீங்கியது. அவனுக்கு வேண்டும் போது நல்ல உணவும், பொன்னும் ஏராளமாகக் கிடைத் தன. ஆதலால், அவன் ஒரு பெரும் பணக்காரன் ஆனான். அவனுக்குப் பல மாளிகைகளும், நிலங்களும், தோட்டங்களும் ஏற் பட்டன. பிறகு, அயல் ஊரில் இருந்த ஒரு பிரபுவின் அழகிய குமாரியைக் கந்தன் மணம் செய்து கொண்டு அங்குச் சந்தோஷமாக வாழ்ந்து வந்தான்.

கந்தன் தான் பெற்ற அந்தக் கிண்ணத்தின் உதவியால் ஏழைகளுக்கு நல்ல உணவு அளித்து வந்தான். அந்த வெள்ளிச் சிமிழிஞல் கிடைத்த பொன் நாணயங்களைக் கொண்டு அவன் பல கோயில்களும் சத்திரங்களும் கட்டிஞன். அதஞல், கந்தன் புகழ் எங்கும் பரவியது. எல்லோரும் அவனைப் புகழ்ந்து கொண்டாடினர். அவனுக்குக் கேடு நினைத்தவர் ஒருவருமே இல்லை. என்? அவனிடம் குறுந்தடி இருந்தது அல்லவா!

—

காமாக்ஷி புக் டெப்போ

பிரசுரங்கள் :—

புதுமுறைத் தமிழ் முதற் பாடம் (முதற் பாகம்)	...0 2 6
,, ,, முதற் பாடம் (இரண்டாம் பாகம்)	...0 1 6
,, ,, இரண்டாம் பாடம்	...0 3 0
,, ,, மூன்றாம் பாடம்	...0 4 0
,, ,, நான்காம் பாடம்	...0 5 0
,, ,, ஐந்தாம் பாடம்	...0 6 0
,, ,, ஆறாம் பாடம்	...0 7 0
,, ,, ஏழாம் பாடம்	...0 8 0
,, ,, எட்டாம் பாடம்	...0 9 0
,, ,, ஒன்பதாம் பாடம்	...0 10 0
உத்தம நண்பர்கள் ...	..0 4 0

இவை வித்தியா இலாகா அதிகாரிகளால்
அங்கீகரிக்கப்பெற்றவை.

For copies apply to :—

Kamakshi Book Depot,

PUBLISHERS, BOOK-SELLERS, STATIONERS
& COMMISSION AGENTS

32, Audiappa Naick Street, Sowcarpet, Madras.

காமாக்ஷி புக் டெப்போ,

நெ. 32, ஆதியப்ப நாயக்கன் தெரு,
ஸௌகார்ப்பேட்டை, மதராஸ்.

Thompson & Co., Ltd., Printers, Madras.